2019 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்பு இல்லை, உட்காருங்கள். நாளை பார்க்கலாம். (குறுக்கீடு) நிறைய பதில் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள்.*

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

அமெரிக்கன் படைப்புழு தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்காச்சோளப் பயிர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான வேளாண்மைத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தின் உணவு தானிய உற்பத்தியில் மக்காச்சோளம் முக்கியப் பங்கு வகிக்கிறது. மக்காச்சோளம் பயிரிடுபவர்களில் 80 சதவீதத்திற்கும்மேல் சிறு, குறு விவசாயிகள்தான். ஆடி, புரட்டாசி மற்றும் சித்திரைப் பட்டங்களில் 80 சதவீதம் மானாவாரியாகவும், எஞ்சியுள்ளவை இறவைப் பயிராகவும், ஒவ்வோர் ஆண்டும் சுமார் 3.5 இலட்சம் எக்டரில் மக்காச்சோளம் தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படுகிறது. வேலூர், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், திருப்பூர், கோயம்புத்தூர், கடலூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், மதுரை, திண்டுக்கல், விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.*

மாறிவரும் பருவநிலை காரணமாக, அமெரிக்காவில் மக்காச்சோளப் பயிரைத் தாக்கும் அமெரிக்கன் படைப்புழு, அமெரிக்காவிலிருந்து 2016 ஆம் ஆண்டு ஆப்பிரிக்க நாடுகளில் பரவி, 2018 ஆம் ஆண்டு நமது நாட்டிலும் பரவியது. தற்போது, நம் அண்டை நாடுகளான இலங்கை, வங்கதேசம், சீனா, வியட்நாம், கம்போடியா ஆகிய நாடுகளிலும் பரவி, குறிப்பாக, மக்காச்சோளப் பயிரினைத் தாக்கி உலக அளவில் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

அமெரிக்கன் படைப்புழு கடந்த 2018 ஆம் ஆண்டில் கர்நாடகம், ஆந்திரப்பிரதேசம், தெலுங்கானா ஆகிய மாநிலங்களிலும், நமது மாநிலத்திலும் மக்காச்சோளப் பயிரைத் தாக்கியது. இப்புழுவின் தாக்குதல் மக்காச்சோளப் பயிரின் அனைத்து நிலைகளிலும் விரைவில் பரவி, பெருமளவு சேதத்தை ஏற்படுத்தும் தன்மை உடையது.

இப்படைப்புழுவின் தாக்குதல் பற்றி எனது கவனத்திற்கு வந்ததும், பயிர் பாதிப்பினைக் கணக்கெடுக்கும் பணியைத் துரிதமாக மேற்கொள்ள வேளாண்மை மற்றும் வருவாய்த் துறையினருக்கு உடனடியாக நான் உத்தரவிட்டேன். பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவும், தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளிடம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வேளாண்மைத் துறைக்கு நான் உத்தரவிட்டேன்.

அதுமட்டுமின்றி, மாநில பேரிடர் நிவாரண நிதியின் வரையறைகளின்படி இம்மாதிரியான பாதிப்புகளுக்கு நிவாரணத் தொகை வழங்க வழிவகை இல்லாத காரணத்தால், இந்த வகையான பயிர் பாதிப்பினையும் வரையறைகளில் சேர்த்து, நிவாரணம் வழங்கவும் உத்தரவிட்டேன்.

உரிய பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டபோதிலும், இப்படைப்புழு கடந்த ஆண்டு முதன்முதலாக தாக்கியதால், சாகுபடி செய்யப்பட்ட 3.55 இலட்சம் எக்டரில் 2 இலட்சத்து 20 ஆயிரத்து 986 எக்டர் பாதிப்படைந்தது.

முற்பகல் 11-55

வேளாண்மை மற்றும் வருவாய்த் துறையினர் துரிதமாக கணக்கெடுத்ததன் அடிப்படையில், மக்காச்சோளத்தைப் பயிரிட்டு, அமெரிக்கன் படைப்புழுவால் பாதிக்கப்பட்ட 17 மாவட்டங்களில் உள்ள 2 இலட்சத்து 93 ஆயிரத்து 424 விவசாயிகளின் துயர் துடைக்க மாநில பேரிடர் நிவாரண நிதியின்கீழ் இறவைப் பயிருக்கு எக்டருக்கு 13,500 ரூபாயும், மானாவாரிப் பயிருக்கு எக்டருக்கு 7,410 ரூபாயும் என்ற விகிதத்தில் மொத்தம் 186 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், இப்புழு தாக்குதலைத் தடுக்க, கோடை உழவு போன்ற பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுக்கவும், விவசாயிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, இப்படைப்புழு தாக்குதலிலிருந்து பயிர்களைக் காத்து, விவசாயிகளின் நலன்

காக்கவும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மாவின் அரசு என்றென்றும் விவசாயிகளின் துயர் துடைக்கும் அரசாகவே விளங்கி வருகிறது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணத் தொகை, மக்காச்சோளப் பயிரினை சாகுபடி செய்து, இப்புழுவின் தாக்குதலினால் பாதிக்கப்பட்டுள்ள சிறு, குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர, ஏற்கெனவே பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இணைந்து இப்புழுவினால் பாதிப்படைந்த மக்காச்சோள விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையினையும் பெற்றுத் தர வேளாண்மைத் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இதுவரை சேராத வேளாண் பெருமக்களும், எதிர்வரும் காலத்தில் இயற்கைச் சீற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து பொருளாதார ரீதியாக தங்களை பாதுகாத்துக்கொள்ள உடனடியாக இத்திட்டத்தில் இணைந்துகொள்ளுமாறு இத்தருணத்தில் அன்புடன் கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. வேளாண்மைத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தானும் ஒரு விவசாயியாக இருந்து, விவசாயிகளின் நிலையை உணர்ந்து, எப்போதும் விவசாயிகளின் துயர் துடைக்கும் காவலனாக கழனி மாடு உழவர்களின் தோழனாக இருந்து, இன்முகத்துடன் நல்லாட்சி செய்து வரும், தமிழகத்தின் நிரந்தர முதல்வர் வணக்கத்திற்குரிய அண்ணன் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 2018-2019 ஆம் ஆண்டில் தமிழக விவசாயிகள் மக்காச்சோளத்தைப் பயிரிட்டு, படைப்புழு தாக்குதலால் பாதிப்புற்று, துவண்டுபோன நிலையினைக் கண்டு, கண்ணும்கருத்துமாக அதனைக் கண்காணித்து, இன்னலடையும் விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைப்பதற்கு